**தேயிலை சக்தி நிதியம் - 2020**
---------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

தேயிலை சக்தி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைளிற்குரிய தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்காக தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்ளுகான குறிப்புக்களுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம், 2000 இன் 47 ஆம் இலக்க தேயிலை சக்தி நிதிய சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை வெளியிடவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றை வெளியிட போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருண்மையான உருப்படிகள் மாற்று முறைகள் மூலம் உறுதிப்படுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

இதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில், நிதிச் செயலாற்றல் கூற்றிலும் உள்ள பெறுமதிகள் அல்லது உருப்படிகளில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் சீராக்கம் செய்வது அவசியமானதென நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடாத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்புக்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள காரணங்களால், இந்த நிதிக்கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு கருத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்துடனான தொடர்புடன் கூடிய இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை சக்தி நிதியத்திற்கு 1998 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 437,505,030 தொகையான மூலதன நனகொடையானது, மூலதனச் சொத்துக்கள் அல்லது செயற்பாட்டுச் செலவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டமைக்கான முறையான சான்றுகள் இல்லாமை காரணமாக, 2012 ஆம் ஆண்டு முதல் 10 ஆண்டுகளில் காலக்கழிவாக மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, திறைசேரி நன்கொடைகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட / நிர்மாணிக்கப்பட்ட அல்லது நவீனமயப்படுத்தப்பட்ட சொத்துக்களின் பெறுமதி தொடர்பான உறுதிப்படுத்தல் காணப்படவில்லை என்பதால், மீளாய்வாண்டின் ஒத்திவைக்கப்பட்ட வருமானமாகக் கணக்கில் பதிவிடப்பட்டிருந்த ரூபா 43,750,503 தொகையான காலக்கழிவுப் பெறுமதியின் சரியான தன்மை கணக்காய்வின்போது திருப்திகரமாக உறுதிப்படுத்தப்படவில்லை. | தேயிலை சக்தி நிதியத்தின் சொத்துக் கொள்வனவுகள் மற்றும் நிர்மாணப் பணிகள் 2000, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபாய் 437.50 மில்லியன் ஒதுக்கீடானது எவ்வகையான சொத்தைக் கொள்வனவு செய்வதற்கு / நிர்மாணிப்பதற்கு அல்லது புனரமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பான பதிவுகள் தற்போது தேயிலை சக்தி நிதியத்திடம் இல்லை. | திறைசேரி மானியங்கள் நிலையான சொத்துக்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட விதம் குறித்து திட்டவட்டமாக இனங்காணப்பட வேண்டுமென்பதுடன், குறித்த பயன்பாடுகள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டுத் நியமம் 38 இன் 97 ஆம் பந்தி மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான கணக்கீட்டுக் குறிப்புகள் இலக்கம் 2.5 இன் பிரகாரம் கணினி மென்பொருளானது 5 ஆண்டுகளுக்குள் தேய்மானத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2010 ஆம் ஆண்டில் ரூபா 2,600,000 க்கு கொள்வனவு செய்யப்பட்டு நிர்மானிக்கப்பட்டிருந்த கணினி மென்பொருளானது 2020 திசெம்பர் 31 வரை காலக்கழிவுக்கு உட்படுத்தப்படாமல் கொள்விலையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகிறேன். | இலங்கை கணக்கீட்டுத் நியமத்திற்கமைய காலக்கழிவுக்கு உட்படுத்தப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008/2009 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 2,790,822 பொருளாதார சேவை கட்டணமானது, வருமான வரியுடன் ஈடுசெய்து கொள்ளக்கூடிய காலப்பகுதியான 3 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அவற்றை பதிவழிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளாமல் பெற வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் இனங்காட்டப்பட்டிருந்தது. | இணங்குகிறேன். 2025 ஆம் ஆண்டு இறுதி கணக்கு அறிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | முறையான அனுமதியின் கீழ் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் சொத்துக்கள் தொடர்பில் இற்றைப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, விபரமான உப அட்டவணைகள், 2020 திசெம்பர் 31 ஆம் திகதிக்கான இருப்புக் கணிப்பீட்டு அறிக்கைகள் அல்லது எவ்வித விபரமான தகவல்களும் நிதியத்திடம் இருக்கவில்லை என்பதாலும், வேறுபட்ட மாற்று முறைகள் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமற்போனமையினாலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதிக்கூற்றில் இனங்காட்டப்பட்டுள்ள ரூபா 226,565,308 பெறுமதியுடைய ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் ரூபா 25,585,245 முதலீட்டுச் சொத்துக்கள் ஆகியவற்றுடன் குறித்த சொத்துக்களுக்குரிய ரூபா 12,612,507 மதிப்பிலான மீளாய்வாண்டிற்கான தேய்மானங்களின் முழுமைத்தன்மை, சரியான தன்மை மற்றும் பௌதீக இருப்பு என்பனவற்றைக் கணக்காய்விற்காக உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. | இணங்குகிறேன். 2025 நிதிக்கூற்றுக்களுடன் நிலையான சொத்து பதிவேடுகளையும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இற்றைப்படுத்தப்பட்ட நிலையான சொத்து பதிவேடொன்றைப் பேணிச்செல்ல வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பஸ்ஸர மற்றும் கெப்பிட்டிபொல தேயிலைத் தொழிற்சாலைகளுக்குரிய வருடாந்த குத்தகை வருமானம் ஒப்பந்தத்திற்கமைய சரியாக இனங்காணப்படாமையின் காரணமாக, மீளாய்வாண்டின் குத்தகை வருமானம் ரூபா 2,463,750 ஆல் அதிகரித்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்குகிறேன். | ஒப்பந்தத்திற்கமைய அறவிடப்பட வேண்டிய வருமானங்களைச் சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களுக்குள் காண்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | குத்தகைக்கு விடப்பட்டிருந்த ரைகம் கோரள தேயிலைத் தொழிற்சாலையின் குத்தகை ஒப்பந்தத்திற்கமைய, தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் ஒரு கிலோகிராம் தயாரிக்கப்பட்ட தேயிலைக்கு ரூபா 8 வீதம் தேயிலையின் அளவு அடிப்படையில் குத்தகை செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன், அது ரூபா 250,000 க்குக் குறையாததாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிதியத்தினால் குத்தகை ஒப்பந்தத்திற்கமைய ரைகம் கோரள தேயிலைத் தொழிற்சாலையின் மீளாய்வாண்டிற்குரிய எத்தகைய குத்தகை வருமானமும் நிதிக்கூற்றுக்களுக்குள் இனங்காட்டப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன். | ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கமைய அறவிடப்பட வேண்டிய வருமானங்களைச் சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களுக்குள் காண்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளுக்கும் அதற்குரிய பரீட்சை மீதி மற்றும் தொடர்புடைய பேரேட்டுக் கணக்கின் மீதிகளுக்கும் இடையில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. அதற்கமைய ஆண்டின் இறுதியில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள உழைப்பு மீதியானது ரூபா 55,504,407 ஆக இருந்தபோதிலும், பரீட்சை மீதியின் படி குறித்த மீதியானது ரூபா 57,306,167 ஆகவும், பேரேட்டுக் கணக்கில் குறித்த மீதியானது ரூபா 43,648,595 ஆகவும் பதிவிடப்பட்டுள்ளது. மேலும் நிதிக்கூற்று மற்றும் பரீட்சை மீதியின்படி ஓய்வூதியப் பயன்கள் பொறுப்பு மீதியானது ரூபா 1,714,336 ஆக இருந்தபோதிலும், தொடர்புடைய பேரேட்டுக் கணக்கில் ஆண்டின் இறுதியில் மீதி எதும் காட்டப்பட்டிருக்கவில்லை. குறித்த வேறுபாடுகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், நிதிக்கூற்றுக்கள் ஊடாகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு மீதிகளின் | இணங்குகிறேன். | கணக்காண்டின் இறுதித் திகதி வரை இற்றைப்படுத்தப்பட்ட பேரேட்டுக் கணக்கு மீதிகளின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேுற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சரியானதன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| (ஊ) | 2019 ஜுன் 14 ஆம் திகதியன்று மீதியானது ரூபா 2,171,869 ஆகக் காணப்பட்ட 8 வங்கி நடைமுறைக் கணக்குகள் மூடப்பட்டு, நிதியத்திற்கு உரித்தான வேறு நடைமுறைக் கணக்கொன்றுக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் குறித்த மீதிகள் காசு மற்றும் காசுக்குச் சமனானவையும் என்ற வகையிலும் நடைமுறைப் பொறுப்பாகவும் நிதிக்கூற்றுக்களுக்குள் இனங்காணப்பட்டிருந்தன. | இணங்குகிறேன். | கொடுக்கல் வாங்கல்களைச் சரியான பேரேட்டுக் கணக்குகள் ஊடாகப் பொருத்தமான முறையில் சரிசெய்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் | 358,138,297 | விவரமான துணை அட்டவணைகள் மற்றும் மீதிகள் உறுதிப்படுத்தல்கள் | கணக்கு மீதிகள் தொடர்பாக தேயிலை சக்தி நிதியம் தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளைப் பெற்று, 2025 ஆம் ஆண்டு இறுதியாக தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்கள் மூலம் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் போதுமான விளக்கமான அட்டவணைகள், மீதி உறுதிப்படுத்தல்கள், மீள்மதிப்பீட்டு அறிக்கைகள், பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் பெறுமதிச் சான்றிதழ்கள் ஆகியவற்றை நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதி | 234,493,519 | | | |
| (இ) | முதிர்வடைந்த பயிர்கள் | 10,002,019 | மீன்மதிப்பீட்டு அறிக்கைகள் | | |
| (ஈ) | முதிர்வடையாத பயிர்கள் | 6,716,358 | | | |
| (உ) | நடைமுறை வேலைகள் | 1,567,205 | பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் பெறுமதிச் சான்றிதழ்கள் | | |

### 1.6 சட்டம், விதி, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மைகள்

| சட்டம், விதி, பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட சுற்றறிக்கையுடன் பிரசுரிக்கப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டலின் 6.6 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2021 முதல் 2024 ஆண்டு வரை நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்க்ள் 2025 நவம்பர் 10 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2026 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை 2020 ஆம் ஆண்டிற்கான வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | இணங்குகிறேன். | குறிக்கப்பட்ட காலப்பகுதிகளுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைவு வருடாந்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 110,518,076 ஆன மிகையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 65,074,453 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 45,443,623 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு வருமானம் ரூபா 10,918,575 இனால் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 9,868,221 இனால் அதிகரித்தமை, வட்டி வருமானங்கள் 6,504,626 இனால் அதிகரித்தமை மற்றும் நிர்வாக செலவினம் ரூபா 18,151,791 இனால் குறைவடைந்தமை முக்கிய காரணமாக அமைந்தன.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தொழிற்சாலைகளை வாடகைக்கு வழங்குவதன் மூலமான வருமானம் 18 சதவீதத்தாலும், நிலையான வைப்புகள் மீதான வட்டி வருமானம் 213 சதவீதத்தாலும், ஏனைய வருமானங்கள் 78 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன், நிர்வாகச் செலவுகள் 35 சதவீதத்தால் குறைந்திருந்தன.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 1.6: 1 என்ற பெறுமதியைக் கொண்டிருந்ததுடன், கடந்த ஆண்டின் நடைமுறை விகிதம் 1.35: 1 ஆக இருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறைச் சொத்துக்களில் ஏற்பட்ட 17 சதவீத வளர்ச்சிக்கு அமைய, நடைமுறைப் பொறுப்புகள் 0.2 சதவீதத்தால் மிகச் சிறியளவில் வளர்ச்சியடைந்திருந்தமையே இந்த விகிதத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2002 / 2003 மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 4,545,276 தொகையானது நிறுத்திவைத்தல் வரிகள் மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தித் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன். | நிலுவையிலுள்ள நிறுத்திவைத்தல் வரிகளைத் செலுத்தித் தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்தினால் செயற்படுத்தப்படும் ஹொரண உரக் களஞ்சியம் மற்றும் ரைகம் கோரள தொழிற்சாலை என்பன அமைந்துள்ள காணிகளின் உரிமையானது, தற்போது சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் பிரதேச செயலாளரின் கீழும், அல்பிட்டிய, ஹிநிதூம மற்றும் பஸ்ஸர ஆகிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகள் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழும் காணப்படுகின்ற போதிலும், காணிகளின் உரிமையைச் சட்டரீதியாக நிதியத்திற்குப் பெற்றுக்கொள்ளாமல் கட்டடங்களும் தொழிற்சாலைகளும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | இணங்குகிறேன். காணிகளைச் சட்டரீதியாகப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வழங்கு நடவடிக்கைகளிற்கு செலவிட நேரிடும் செலவுகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |